**<u>சார்பு நீதிமன்றம், இலால்குடி.</u>**

நாள்:07.01.2023 சனிக்கிழமை

OS.No.24/2018 PW1: சரவணன்

**<u>D1, D2, D5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது வயது 42 ஆகிறது. தாவா சொத்து பரமசிவம் என்பவருக்கு பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை . பரமசிவத்தின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை . அவருக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை . சப்தரிஷி, அருணாச்சலம், திருநாவுக்கரசு, ஆகியோர் இறந்ததற்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . எனது அப்பா இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேன் . அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல . பரமசிவம் செட்டியாருக்கு ஏகப்பட்ட சொத்துக்கள் இருந்தது. பரமசிவம் செட்டியார் எனது அப்பாவுடைய அப்பா. நான் அவரது பேரன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . முச்சலிக்கா பத்திரம் சம்மந்தம் இல்லாதது என்றும் , அதை நாங்களே ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல . முச்சலிக்கா பத்திரம் எழுத உரிமை இல்லை என்றால் சரியல்ல . பாகப்பிரிவினை செய்தற்கான ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் . அவ்வாறு பாகப்பிரிவினை செய்ய எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. செல்லம்மாள் என்பவருக்கு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. அவர்களுக்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை . தாவா சொத்திற்கும் எனக்கும், எனது அப்பாவிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . பரமசிவம் செட்டியார் இறந்த பிறகு நாங்களும் பிரதிவாதிகளும் பாகம் பிரிக்காமல் அனுபவித்து வந்தோம் என்று

சொல்லியிருப்பது சரிதான் . இன்றுவரை அனுபவம் என்னிடம் தான் இருக்கிறது. பிரித்த பாகத்தில் நான் இருக்கிறேன்.

மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

/Signed/

சரவணன்

/Signed /

A.B.நசீர் அலி, B.A.,B.L.,

சார்பு நீதிபதி(FAC)

இலால்குடி